# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

## பரிசுத்த ஆவியானவரின் அக்கினிமயமான கிரியைகள் சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியாவில் வெளிப்பட்டது

சிங்கப்பூர்



மலேசியா




இந்தோனேசியா



ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதலுக்குப் பின்னர், அவருடைய சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டனர்; பின்பு, தேவ வல்லமையையும் பெற்றுக்கொண்டனர். அப்போஸ்தலர்களின் ஊழியங்களை குறித்து மிக நன்றாக புதிய ஏற்பாட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் மூலம் வெளிப்பட்ட திரளான வல்லமையான கிரியைகளில், பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தார் (அப். 19:11–2). அது என்னவென்றால், பவுலின் சரீரத்திலிருந்து உறுமால்களும் கச்சைகளும், வியாதிக்காரர்மேல் போடப்பட்டபோது, வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன.

இன்றும்கூட, மான்மின் தலைமை சபையின் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்த கைக்குட்டைகளின் மூலமாக உலகமெங்கிலும் பரிசுத்த ஆவியானவரின் ஆச்சரியமான கிரியைகள் நடைபெற்று வருகின்றன. அந்தக் கிரியைகள் ஜீவனுள்ள தேவனையும், பரிசுத்த வேதாகமத்தின் நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்துகின்றன. சமீபத்தில், மான்மின் உலக கிளை சபைகளின் வழிநடத்தும் போதகர் உயர்திரு. ஹீசன் லீ அவர்கள், சிங்கப்பூர், மலேசியா மற்றும் இந்தோனேசியாவில் கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டங்களை நடத்தினார்.

ஏப்ரல் 8 அன்று, முதலாவது கூட்டம் சிங்கப்பூர் மான்மின் சபையில் நடைபெற்றது. அந்த நாளில் சபையின் 6வது ஆண்டுவிழாவும், அதன்பிறகு கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டமும் நடந்தது. இந்தக் கூட்டத்தில், மலேசியாவின் அநேக பகுதிகளில் இருந்து மான்மின் தலைமை சபையின் ஆராதனைகளில் பங்குப்பெற்றுவந்த திரளான மக்களும், சிங்கப்பூர் மான்மின் சபை விசுவாசிகளும் பங்குப்பெற்றனர். போதகர் யாக்கோபு 2:22ம் வசனத்தின் அடிப்படையில், “ஆவிக்குரிய கிரியைகள்” என்ற தலைப்பில் செய்தியை பிரசங்கித்து, வியாதியஸ்தர்களுக்காக வல்ல–மையின் கைக்குட்டையை வைத்து ஜெபித்தார்கள். ஜெபத்திற்குப் பின்னர், பல ஆண்டுகளாக காது சவ்வு கிழிந்துப்போனதால், கேட்கமுடியாமல் இருந்த ஒருவர் கேட்கும் திறனைப் பெற்றுக் கொண்டார். ஐந்து வயதான ஊமையான ஒரு பையன் பேச தொடங்கினான். இன்னும் திரளான மக்கள் தைராய்டு, உறைந்த தோள்பட்டை, கண் பிரச்சனை மற்றும் மைய நரம்பு மண்டலத்தைச் சிதைக்கின்ற பார்க்கின்சன் நோயிலிருந்தும் சுகத்தைப் பெற்றுக்கொண்டனர்.

ஏப்ரல் 11 அன்று, மலேசியாவிலுள்ள செவிடர்களுக்கான பெனாங் மான்மின் சபையில் மற்றொரு கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டம் நடைபெற்றது. இணையதள நேரடி ஒளிபரப்பில் தாய்லாந்து, டென்மார்க், பிரான்சு, ஜெர்மனி மற்றும் ஆஸ்திரேலியா உள்பட 12 நாடுகளிலிருந்து காது கேளாத அங்கத்தினர்கள் இணைந்து பங்குப்பெற்றனர். உயர்திரு. லீ அவர்கள் 1 தெச–லோனிக்கேயர் 5:21–23ம் வசனங்களின் அடிப்படையில் “நற்குண இருதயம்” என்ற தலைப்பில் செய்தியை பிரசங்கித்து, தேவனுக்கு துதிகளை ஏறெடுக்கும்படி விசுவாசிகளை நடத்தினார். விசுவாசிகள் சைகை மொழியிலும், நடனமாடியும் தங்கள் இருதயங்களை தேவனுக்கு செலுத்தினார்கள். போதகர் கைக்குட்டையை வைத்து வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தபோது, 35 செவிட்டு மக்கள் மேடைக்கு முன்பதாக வந்து தங்களால் சத்தத்தை கேட்க முடிகிறது என்று சாட்சி சொன்னார்கள். சரீரத்தின் இடதுபுற பக்கவாதம், சரீரம் முழுவதும் இருந்த தோல் வியாதிகள், லூபஸ் எரிதிமாடோசஸ் (திசு சிதைவு மற்றும் அழற்சி), மூச்சுவிடுவதில் இருந்த கஷ்டம், சிறுநீர் அடங்காமை மற்றும் நாசி அலர்ஜி போன்ற வியாதிகளிலிருந்து அநேகர் சுகமடைந்தனர்.

ஏப்ரல் 14 அன்று, இந்தோனேசியாவில் உள்ள பெத்தேல் சபையில் கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டத்தை உயர்திரு. லீ நடத்தினார். அவர் எபிரெயர் 11:1–3ம் வசனங்களின் அடிப்படையில் “ஆவிக்குரிய விசுவாசமும், மாம்ச விசுவாசமும்” என்ற தலைப்பில் பிரசங்கித்தார்; பங்குப்பெற்ற மக்கள் ஆவியானவரின் நிறைவினால் தேவனை துதித்து, மனந்திரும்ப உதவினார். அதன்பிறகு, வியாதியஸ்தர்களுக்காக உயர்திரு. லீ ஜெபித்த போது ஆச்சரியமான சுகமளிக்கும் கிரியைகள் நடைபெற்றது. பங்குப்பெற்றவர்களில் அநேகர் மார்பு புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய், இரத்தப் புற்றுநோய், சர்க்கரை வியாதி, பக்கவாதத்தின் பின்விளைவு மற்றும் மோசமான பார்வைத்திறன் போன்ற வியாதிகளிலிருந்து சுகமடைந்தனர்.

ஏப்ரல் 15 அன்று, உயர்திரு. லீ ஓசன்னா நாதர் சபைக்கு அழைக்கப்பட்டிருந்தார். அந்தச் சபையின் போதகர் டானி சாட்ரியன்டா தன் சபையின் பிரிவில் உள்ள மற்ற போதகர்களுடன் 2017ம் ஆண்டில் மான்மின் தலைமை சபைக்குச் சென்றிருந்தபோது மிகுந்த கிருபையை பெற்றுக் கொண்டார். அவர்களுடைய மிகுந்த வேண்டு–கோளின்படி இந்தக் கூட்டம் அவருடைய சபையின் நடைபெற்றது. உயர்திரு. லீ அவர்கள் “ஒளியிலே நடப்பதால் கிடைக்கும் ஆசீர்வாதம்” (1யோவான் 1:5–7) என்ற தலைப்பிலே செய்தியை பிரசங்கித்து, வல்லமை அடங்கிய கைக்குட்டையை வைத்து ஜெபித்தார். பங்குப்பெற்ற மக்கள் மார்பு கட்டி, சிறுநீரக பாதிப்பு, சிறுநீரக கல், குடல் அழற்சி, பக்கவாதத்தின் பின்விளைவு மற்றும் பார்வைத்திறன் கோளாரிலிருந்து சுகம் பெற்றனர்.

ஏப்ரல் 16 அன்று, தாங்கெரங் மான்மின் சபையில் பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெறும் ஜெபக்கூட்டத்தை நடத்தினார். 2 நாளாகமம் 20:20ம் வசனத்தின் அடிப்படையில், “நம்பிக்கை” என்ற தலைப்பில் போதகர் செய்தியை பிரசங்கித்தார்; துதிஆராதனை நடத்தி பங்குப் பெற்றவர்கள் மனந்திரும்பச் செய்தார். உயர்திரு. ஹீசன் லீ கைக்குட்டையை வைத்து ஜெபித்தபோது, மக்கள் சக்கரநாற்காலியிலிருந்து எழுந்து நின்று, நடந்து, குதித்தார்கள்; அநேக வியாதிகளிலிருந்தும் சுகத்தைப் பெற்றுக்கொண்டனர்.

பாவமும் தீமையும் பெருகி வருகிற இந்த கடைசி காலத்திலும், அப்போஸ்தலர் நடபடிகளில் எழுதப்பட்டபடி பரிசுத்த ஆவியானவரின் விசேஷித்த அற்புதங்களினால் இன்றும் எண்ணற்ற ஜனங்களை வழிநடத்திக் கொண்டு வருகிற ஜீவனுள்ள தேவனுக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துவோம்.

### “தேவன் ஒருவருக்கே மகிமையை செலுத்துகிற மான்மின் ஊழியத்தால் நான் ஈர்க்கப்பட்டேன்!”




போதகர் டானி சான்ரியன்டா, இந்தோனேசியாவின் ஜகர்த்தாவில் உள்ள பெந்தெகோஸ்தே சபைகளின் இயக்குனர்


கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டத்தில் நான் தேவ பிரசன்னத்தை உணர்ந்தேன். அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்துக் கொடுத்த கைக்குட்டையை வைத்து உயர்திரு. ஹீசன் லீ வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தபோது அநேகர் தங்களுடைய வியாதியிலிருந்து சுகமடைந்தனர். நான் தொடர்ச்சியாக மான்மின் தலைமை சபையோடு ஊழியத்தில் இணைந்து பணியாற்ற விரும்புகிறேன். என் சபை விசுவாசிகளில் இன்னும் அநேகரும் தேவனுடைய வல்லமையை அனுபவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். தேவனை மகிமைப்படுத்துகிற மான்மின் ஊழியத்திற்கு என் நன்றிகளை செலுத்துகிறேன்.

# “வல்லமை தேவனுடையது!”

“தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன், வல்லமை தேவனுடையது என்பதே” (சங்கீதம் 62:11).






**அறிவர். ஜேராக் லீ,**
**தலைமை போதகர், மான்மின் மத்திய திருச்சபை**

- தலைமை போதகர், இயேசு கிறிஸ்துவின் ஒருங்கிணைந்த பரிசுத்த திருச்சபைகள்
- நிரந்தர தலைவர், உலக கிறிஸ்தவ எழுப்புதல் ஐக்கிய ஸ்தாபனம்
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், உலக கிறிஸ்தவ அலைவரிசைகள் குழுமம் (GCN)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், உலக கிறிஸ்தவ மருத்துவர்கள் குழுமம் (WCDN)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், மான்மின் சர்வதேச வேதாகம கல்லூரி (MIS)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், சர்வதேச பரிசுத்த இறையியல் கல்லூரி
- ஊழியத்தின் முனைவர், தெய்வீகத்தின் (Divinity) கௌரவ டாக்டர் பட்டங்களை உலக நாடுகளின் பிரசித்திப்பெற்ற இறையியல் கல்லூரிகளில் பெற்றவர்.
- அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்கள் உலகமெங்கிலும் 220 நாடுகளில் பல கிறிஸ்தவ மற்றும் பொது ஊடகங்கள் வழியாக 24 மணி நேரமும் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.
- அறிவர். லீ அவர்கள் பெரு, காங்கோ மற்றும் பல ஆப்பிரிக்க நாடுகளின் ஜனாதிபதிகள் மற்றும் அநேக அரசியல் தலைவர்களுக்கு கௌரவ தெய்வீக ஆலோசகராய் செயல்பட்டு வருகிறார்.

*அவரது கிறிஸ்தவ செய்திகள், ஜூங்ஆங் தினத்தந்தி, தடோங்–அ இல்போ, த சியோல் ஷின்முன், த ஹான்கியோரே ஷின்முன், த கொரியா எக்கனாமின் தினதந்தி, த ஷீஷா செய்திகள் மற்றும் கிறிஸ்தவ பத்திரிக்கையில் வெளியாகிறது.*

அவர் அமெரிக்கா; ஜப்பான்; இந்தியா; பாகிஸ்தான்; பிலிப்பைன்ஸ்; அர்ஜென்டினா; ஹோண்டூராஸ், பெரு; ரஷ்யா; ஜெர்மனி; கென்யா; டான்சானியா; உகாண்டா; குடியரசு காங்கோ; இஸ்ரேல்; எஸ்டோனியா மற்றும் உலகத்தின் பல நாடுகளில் படைமுயற்சி கூட்டங்களை நடத்தியுள்ளார்.

தேவன் தம்முடைய வல்லமையான கிரியையை காண்பிக்கும்போது, அதன் கனி எப்போதும் நற்குணமாகவே இருக்கும். அது ஆத்தும இரட்சிப்புக்கு வழிநடத்தி தேவனை மகிமைப்படுத்தும். சாத்தான் எல்லா மனிதர்களுடைய வாழ்வு, மரணம், அதிர்ஷ்டம் மற்றும் துரதிர்ஷ்டத்தை கட்டுப்படுத்துகிற தேவனுடைய வல்லமையின் வெளிப்பாட்டை ஒருபோதும் பின்பற்றமாட்டான். ஜனங்களை தேவனுக்கு விரோதமாக எதிர்த்து நிற்க வைப்பதற்கு அது எவ்வளவு கடினமாக சோதித்து முயற்சித்தாலும், ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை சிருஷ்டிக்கிற தேவனுடைய வல்லமைக்கு முன் போட்டியிட இயலாது. இப்போது நாம் தேவனுக்குரிய வல்லமையையும் அதை எப்படி பகுத்தறியலாம் என்பதையும் தியானிப்போம்.

## 1. தேவனுக்குரிய வல்லமையின் நிரூபணம்

வல்லமை என்பது நோக்கம், மரியாதை மற்றும் மகிமை வாய்ந்த தேவனுடைய வல்லமையை குறிக்கிறது. வல்லமையால் தேவன் மனிதர்களால் செய்ய முடியாத காரியங்களை செய்கிறார். அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அதனால்தான் தேவனிடத்திலிருந்து இந்த வல்லமையை பெற்றவர் அவருக்கு அளிக்கப்பட்ட வல்லமையின் நிலையின்படி அடையாளங்களையும், அற்புதங்களையும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசயமான கிரியைகளையும் செய்ய முடியும்.

### 1) அடையாளங்கள் : தேவனுடைய வல்லமையின் வெளிப்பாடு

அடையாளம் என்பது மனித வரம்புகளையும் கடந்து தேவனுடைய வல்லமை வெளிப்படும் நிலையை குறிக்கிறது. அடையாளங்களின் உதாரணங்கள் பின்வருமாறு உள்ளன: குருடர்களுக்கு பார்வை –யளிக்கப்படுதல், ஊமையர் பேசுதல், செவிடர் கேட்டல் மற்றும் முடவர்கள் நடத்தல். இது குட்டையான கால் வளர்ந்த மற்ற காலோடே சரிசமமாகுதல், போலியோ மற்றும் பெருமூளைவாதம் போன்றவற்றை குணமாக்கி இயல்பாக்குவதையும் உள்ளடக்கியுள்ளது.

இப்பேர்பட்ட அடையாளங்களை வெளிப்படுத்துவதற்கு இத்தகைய அற்புதங்களையச் செயல்படுத்தும் வல்லமையை ஒருவர் பெற வேண்டும். இது சுகமாக்குகிற வரத்தைவிட வித்தியாசமானது. சுகமாக்குகிற வரம் என்பது வைரஸ் அல்லது பாக்டீரியாக்களால் உருவாகும் புற்று மற்றும் நுரையீரல் போன்று மருத்துவத்தினால் சுகமாக்கப்படுகிற நோய்களை குணமாக்குகிறது ஆகும். ஆனால் அற்புதங்களை செயல்படுத்துகிற வல்லமை என்பது மனித ஆற்றலால் மருத்துவ அறிவியலினால் குணமாக்கப்பட முடியாத மக்களை குணமாக்குவதாகும். அவைகள் தேவனுடைய வல்லமையினாலே மட்டுமே குணமாக்கப்பட முடியும்.

உதாரணமாக புற்றுநோயின் கடைசி நிலையில் பாதிக்கப்பட்ட ஒருவர், அவர் வாழ்வதற்கு அநேக நாட்கள் இல்லை என்று கேள்விப்பட்டார் என்று வைத்துக்கொள்வோம். அவனோ அல்லது அவன் குடும்பத்தினரோ, அன்போடுகூட தேவனை பற்றிக்கொண்டு, முற்றிலுமாக மனந்திரும்பி, பாவச் சுவர்களை அழிக்க வேண்டும். தேவனுக்குப் பிரியமான அப்பேர்பட்ட விசுவாசத்தை அவர்கள் காண்பிக்க வேண்டும். அப்போது சுகமாகுதலின் கிரியை தேவனுடைய வல்லமையைப் பெற்ற நபரின் கரத்தினால் நிகழும்.

இந்த அற்புதத்தை செயல்படுத்தும் சக்தி சில நேரம் ஈவாக அல்லது ஆவிக்குரிய அன்பின் வல்லமையால் மற்றும் நீதிமானின் ஊக்கமான ஜெபத்தினால் நிகழும். ஆனால் அற்புதங்களை செயல்படுத்தும் சக்தி எப்போது பூரணமாக செயல்படுமென்றால், தீமையை முற்றிலுமாய் களைந்துப்போட்டு பரிசுத்தமாகி, ஊக்கமான ஜெபத்தினால் தேவனிடத்திலிருந்து வல்லமையை ஒருவர் பெற்றுக்கொள்ளும்போதே. இது உண்மையுள்ள இருதயத்தோடுகூட நிகழ்த்தப்படும் அற்புதங்களை செய்யும் வகை. மேலும் இந்த அற்புதங்களை தேவனுடைய வல்லமையின் நிலையில் செய்தல் என்பது ஆண்டவருடைய வருகை வரை அவரை மகிமைப்படுத்த தொடர்தேர்ச்சியாக பயன்படுத்தப்படலாம்.

### 2) அதிசயங்கள் : வான்வழி / வானிலை நிகழ்வுகளின் கட்டுப்பாடு

அதிசயம் என்பது வான்வழி / வானிலை நிகழ்வுகளை கட்டுப்படுத்துகிற சிருஷ்டிகராகிய தேவனுடைய கிரியையை குறிக்கிறது. இது ஆகாய மண்டலத்திலுள்ள நட்சத்திரங்கள் உட்பட வான் கோள்களை நகர்த்துதல் மற்றும் பனி, மழை, காற்று, மேகங்கள், தட்பவெப்பம் மற்றும் வளிமண்டல அழுத்தம் போன்ற வானிலை நிகழ்வுகளை கட்டுப்படுத்துகிறதாகும்.

சாமுவேல் ஜெபித்தபோது தேவன் இடி முழக்கத்தையும், மழையையும் அனுப்பினார் (1 சாமுவேல் 12:18), தீர்க்கதரிசியாகிய ஏசாயா தேவனை நோக்கி கூப்பிட்டார், அவர் சூரிய கடிகாரத்தின் சாயையின் நிழலை பத்துப்பாகை பின்னிட்டு போகப்பண்ணினார் (2இராஜாக்கள் 20:11), எலியா ஜெபித்தபோது, மூன்றரை வருடங்கள் மழையில்லாதிருந்தது. அவன் மறுபடியும் ஜெபித்த போது, மழை பெய்தது (1இராஜாக்கள் 17–18; யாக்கோபு 5:17–18). இங்கு சூரியன், சந்திரன் அல்லது நட்சத்திரங்களை நகர்த்துதல் என்பது இயற்கைச் சட்டத்திற்கு அப்பால் செல்கிறது. அது ஏற்ற சூழ்நிலை மற்றும் கனப்பொழுதின் கீழ் மட்டுமே செய்யப்பட முடியும். ஆக, ஒருவருக்கு எப்பேர்பட்ட மகத்தான வல்லமை இருந்தாலும்கூட, அவர் தன் இஷ்டத்திற்கு சூரியனையோ அல்லது சந்திரனையோ நிறுத்தக்கூடாது. அவருக்கு அப்பேர்பட்ட மகத்தான வல்லமையிருந்தால், அவர் தேவனுடைய இருதயத்தையும் சித்தத்தையும் புரிந்துகொள்கிறவராயிருக்க வேண்டும். ஆக, அவர் இப்பேர்பட்ட வல்லமையை தன்னிச்சையாக வெளிப்படுத்த ஒருபோதும் முயலமாட்டார்.

### 3) அசாதாரண அற்புதங்கள் மற்றும் குறிப்பிடத்தக்க விஷயங்கள்

வேதாகமத்தில், அசாதாரண அற்புதங்கள் அப்போஸ்தலர் 19:11–12ல் தோன்றுகிறது. அதில் வாசிக்கிறோம், “பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன.” குறிப்பிடத்தக்க விஷயங்களின் உதாரணங்கள் மோசேயின்மூலமாக எகிப்தின் மேல் விழுந்த பத்து வாதைகள் மற்றும் திமிர்வா–தக்காரனை சுகமாக்கினது (லூக்கா 5:17–26). இந்த அசாதாரணமான அற்புதங்களும் குறிப்பிடத்தக்க விஷயங்களும் தேவனுடைய வல்லமையின் மூலமாக பல வழிகளில் பல ரூபங்களில் வெளிப்படுத்தப்பட இயலும்.








நம்முடைய திருச்சபையில், அநேகர் பல்வேறு வியாதிகளிலிருந்து குணமாகியுள்ளனர். நடக்க முடியாதோர் நடக்கவும், குதிக்கவுமாயினர்; அசுத்த ஆவிகள் வெளியேறின; கைக்குட்டை ஜெபத்தின் மூலமாக மக்கள் கண்பார்வை மற்றும் செவித்திறனையும் திரும்ப பெற்றுக் கொண்டார்கள். இப்பேர்பட்ட ஆச்சரியமான கிரியைகள் மூலமாக, எண்ணற்ற மக்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு ஜீவனுள்ள தேவனை மகிமைப்படுத்தினார்கள் (சம்பந்தப்பட்ட சாட்சிகள் பக்கம் 1 மற்றும் 4ல்).

## 2. வல்லமை தேவனுடையது என்பதின் ஆதாரம்

### 1) தேவனுடைய வல்லமை மனிதர்களுடைய வாழ்வு மற்றும் மரணத்தை கட்டுப்படுத்துகிறது

வாழ்வு, மரணம், அதிர்ஷ்டம் மற்றும் துரதிர்ஷ்டம் தேவனுடைய கட்டுப்பாட்டில் உள்ளன. ஆக, ஒருவர் மரித்தோரிலிருந்து மற்றொருவரை எழுப்பினால் அது கண்டிப்பாக தேவனுடைய கிரியை ஆகும். எலியா சாரிபாத்திலிருந்த ஒரு பெண்ணின் மகனை உயிரோடு எழுப்பினார்

### விசுவாசத்தின் அறிக்கை

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)...” (அப். 17:25)
“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” (அப். 4:12)






Russia United Crusade 2003



Germany United Crusade 2004



Dr. Jaerock Lee's meeting with the then president Alejandro Toledo during his visit to Peru for Peru United Crusade 2004




His meeting with the then president Joseph Kabila during his visit to DR Congo for DR Congo Crusade



002 with 3 million people in total in attendance







People were testifying to their healing in India United Crusade









(1இராஜாக்கள் 17:17–24). எலிசா சூனேமியாளின் மகனை உயிரோடு எழுப்பினான் (2 இராஜாக்கள் 4:32–37). அப்போஸ்தலனாகிய பேதுரு, "தபித்தாளே, எழுந்திரு" என்று சொன்னபோது, அவள் மரித்திருந்த போதும், அவள் கண்களை திறந்து, அவனை கண்டு எழுந்து உட்கார்ந்தாள் (அப். 9:40). அப்போஸ்தலனாகிய பவுல் மூன்றாம் மாடியிலிருந்து விழுந்து மரித்துப்போன ஐதிகுவை உயிரோடு எழுப்பினார் (அப். 20:9–12). லாசரு மரித்து நான்கு நாள் ஆகியிருந்த போதும், இயேசுவானவர் அவனுடைய கல்லறைக்கு முன்பு நின்று, "லாசருவே, வெளியே வா" என்று கூப்பிட்ட போது, மரித்தவன் கால்களிலும் கைகளிலும் கட்டப்பட்டவனாய் உயிரோடே வெளியே வந்தான் (யோவான் 11:43–44).

பேதுருவின் சாபத்தினால், அனனியா மற்றும் சப்பீராள் மரித்துப் போனார்கள் (அப். 5:1–11), கனிகொடாத அத்தி மரம் இயேசுவின் வார்த்தையால் பட்டுப்போயிற்று (மத். 21:19), எலிசாவின் சாபத்தினால் 42 இளஞ்சிறுவர்கள் இரண்டு பெண் கரடிகளாலே பீறிபோடப்பட்டார்கள் (2இராஜாக்கள் 2:23–23). தேவனுடைய வல்லமை நிறைந்த ஒருவர் யாரையாகிலும் சபித்தால், அந்த சாபம் அவன் மேல் அப்படியே விழும். வாழ்வு மற்றும் மரணத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிற இந்த வல்லமையான கிரியைகள் தேவனுடைய வல்லமை மூலமாக மட்டுமே வெளிப்படும்.

### 2) மரித்த நரம்பு செல்களை உயிர்ப்பிக்கிற தேவனுடைய வல்லமை

வாழ்வையும் மரணத்தையும் கட்டுப்படுத்துகிற தேவனுடைய வல்லமையைக் குறித்து, மிக குறிப்பாக பேசினால், அது மரித்த நரம்பு செல்களை உயிர்ப்பிக்கும்.

யோவான் 9ல், இயேசுவானவர் பிறவி குருடனின் கண்களைத் திறந்தார். அவர் குருடர்கள் பலரின் கண்பார்வையை திரும்ப தந்தார். செவிடர் பலரின் செவிகளை கேட்கச் செய்தார். இப்பேர்பட்ட கிரியைகள் பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மனிதர்களாலும் புதிய ஏற்பாட்டில் இயேசுவின் சீஷர்களாலும் செய்யப்படவில்லை. இயேசு மட்டுமே இப்பேர்பட்ட வல்லமையை நிகழ்த்தினார்.

மூத்த கண்காணியை என்டக் கிம், 92 வயதில் காலமானவர், விபத்தாக பெரிய பானையில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்த போது அவர்கள் சரீரத்தின் மீது அது கவிழ்ந்து கொட்டி விட்டது. அவர்களுக்கு மூன்றாம் நிலை தீக்காயம் ஏற்பட்டது என்று கண்டறியப்பட்டது. அவர்களை மருத்துவ ரீதியாக குணப்படுத்துவது கூடாத காரியம். பிழைப்பதற்கு நிஜமாக வழியேயில்லை. ஆனால் அவர்கள் என் ஜெபத்தைப் பெற்றார்கள், தீக்கா யத்திலுள்ள வெப்பம் தணிந்தது. அநு தினமும் என் ஜெபத்தைப் பெற்றார்கள், தோலும் இரத்த நாளங்களும் புதிதாய் உருவாயின. முற்றிலுமாய் மரித்த செல்கள் மரப்பட்டையைப் போல மூடியது. அந்த வளர்ச்சி கிரமம் பல முறை தொடர்ந்தது. சீர்நிலை பெற முடியாத அவர்கள் சரீரம் மூன்றே மாதத்திற்குள் சீர்நிலை பெற்றது. அன்பின் தேவன் அவள் சருமத்தை எந்த ஒரு தழும்புமில்லாமல் சாதாரண மக்களின் சருமத்தைப் போல புதுப்பித்தார்.

### 3) தேவனுடைய வல்லமை சிருஷ்டிப்பின் கிரியையை கொண்டு வரும்

தேவன் வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் தம்முடைய வார்த்தையாலே சிருஷ்டித்தார். சிருஷ்டிப்பின் கிரியை தேவனுடைய வல்லமையை பெற்றவர்கள் வார்த்தையின் மூலமாய் நடைபெறும். சிருஷ்டிப்பின் கிரியை புதிய எலும்புகள் அல்லது அவயவங்கள் உண்டாகுதல், குட்டையான கால்கள் வளர்தல் போன்ற நிலைகளை உட்படுத்தியது. ஒன்றுமில்லாமையிலிருந்து சிருஷ்டிக்கப்படுகிற கிரியைகள் இந்த வல்லமைக்கு உதாரணங்களாயுள்ளன.

1 இராஜாக்கள் 17:8–16ல், எலியாவுக்கு உணவு தந்த சாரிபாத்தூர் விதவை, "பானையில் மாவும் கலயத்தில் எண்ணெயும் குறைந்துபோகாத" ஆசீர்வாதத்தைப் பெற்றாள். எலிசா ஆசீர்–வதித்தபோது, பாத்திரங்கள் அனைத்தும் நிரம்பின (2 இராஜா. 4:1–7); இயேசுவானவர் நிகழ்த்திய ஐந்து அப்பம் இரண்டு மீன் (மத்.14:15–21) இந்த சிருஷ்டிப்பின் கிரியைகள் வார்த்தையினாலே நடந்தது. அதேபோல, இயேசுவின் வார்த்தையினாலே நூற்றுக்க–திபதியின் வேலைக்காரன் சுக மானதும், ஆகாயத்தையும் காலத்–தையும் தாண்டி அவருடைய வார்த்தையால் நடந்த சிருஷ்டிப்பின் கிரியையாகும் (மத். 8:5–13).

### 3. இந்த வல்லமையை நிகழ்த்துகிறவர்கள் வல்லமை தேவனிடத்திலிருந்து வருகிறது என்று நிரூபிக்கிறார்கள்

வாழ்வையும் மரணத்தையும் கட்டுப்படுத்துகிற சிருஷ்டிப்பின் கிரியைகளை வெளிப்படுத்தி, சிருஷ்டிகராகிய தேவன் மட்டுமே செய்யக்கூடியதை செய்வதென்பது அவர் தேவனுடைய மனிதன் என்பதை நிரூபிக்கிறது. வேதாகமத்தில், நல்ல இருதயமுள்ளவர்கள் பரிசுத்தமாகி, தேவனுடைய இந்த வல்லமையை நிகழ்த்தினார்கள்.

அப்பேர்பட்ட மக்களின் உதாரணங்கள் பூமியிலுள்ள மனிதர்கள் எல்லாரிலும் மிக சாந்தமுள்ள மனிதனாகிய மோசே, அவன் தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். அவனுக்கு அடுத்த, யோசுவா; பரலோகத்திற்கு உயிரோடு எடுத்துக் கொள்ளப்பட்ட எலியா, அவனுடைய சீஷனாகிய எலிசா; கண்காணியாகிய ஸ்தேவான், தன்னை கல்லால் எறிந்து கொண்டிருந்தவர்களுக்காக மிக உயரிய நற்குணத்தை காண்பித்து ஜெபித்தவன் மற்றும் அப்போஸ்தலனாகிய பவுல் ஆகியோர்.

தேவன் பாவிகளுக்கு செவிகொடுக்கிறதில்லை; ஆனால் தேவனுக்குப் பயந்து அவர் சித்தத்தின்படி செய்கிறவனெவனோ, அவனுக்கு அவர் செவிகொடுப்பார் (யோவான் 9:31; சங்கீதம் 66:18). தேவனுக்கு முன்பாக பாவச்சுவர் இருந்தால், எப்படியாயினும், நம்மால் தேவனுக்கு முன்பாக தைரியமாய் இருக்க முடியாது. அதனால் நாம் நம்முடைய மனோ வாஞ்சையை பெற்றுக்கொள்ள முடியாது. மேலும், வல்லமையை பெற்ற நபர் தேவனுக்கு விரோதமாக பாவஞ்செய்தால், அவரால் தைரியமாய் தேவனிடம் கேட்க முடியாது, அவர் ஜெபத்திற்கு தேவன் பதிலளிக்கமாட்டார்.

தேவனுக்குரிய வல்லமையை ஒருவர் நிகழ்த்தினால், அவர் தேவனுடையவர் என்பது உறுதி செய்யப்படுகிறது, அவரை தேவன் அங்கீகரிப்பார்.

மனிதர்களுடைய ஆற்றலால் செய்ய முடியாத தேவனுடைய வல்லமையை நீங்கள் பார்த்தால், அது தேவனுடைய கிரியைகள் என்றும், தேவனுடைய பிரசன்னத்தின் நிரூபணம் என்றும் நீங்கள் உணர வேண்டும். ஆகவே, தேவனுடைய வல்லமையை ஒருவர் நிகழ்த்துவதை நீங்கள் பார்க்கும்போது, அவர் நடப்பித்த வல்லமையான கிரியைகள்நிமித்தம் அவரை விசுவாசிக்க வேண்டும். அவரை நீங்கள் விசுவாசிக்க முடியாவிட்டாலும், அவர் நிகழ்த்திய கிரியைகள் நிமித்தமாவது விசுவாசிக்க வேண்டும் (யோவான் 14:11).

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, வல்லமை தேவனுடையது. கடந்த 36 ஆண்டுகளாக இந்த திருச்சபையில் பல வல்லமையின் வெளிப்பாடுகள் நடைபெற்று கொண்டு வருகின்றன. அக்கிரியைகளோடு, நாம் சிருஷ்டிகராகிய தேவனை பிரகடனப்படுத்தி, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தையும் பரிசுத்த ஆவியின் கிரியைகளையும் பூமியின் கடைசி பரியந்தமும் நாம் கூறுகிறோம்.

பரிசுத்தமாகி இப்பேர்பட்ட கிரியைகளுக்காக வாஞ்சிக்கிற உங்கள் மூலமாக வல்லமையான கிரியைகள் வெளிப்படும்படியாக ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.



Israel United Crusade 2009

# “ஜீவனுள்ள வார்த்தை என் வாழ்க்கையை மாற்றி, மெய்யான சந்தோஷத்தால் என்னை நிறைத்தது!”

கண்காணி க்வன்ஹாங் பார்க், வயது 49, 32வது மாகாணம், மான்மின் தலைமை சபை



2010ல், நான் ஸ்தாபனத்திற்குட்படாத ஒரு கிறிஸ்தவ மிஷனரி அமைப்பிலும், ஒரு சபையில் போதகராகவும் பணியாற்றி வந்தேன். ஒரு நாளில், என் மனைவி கண்காணியாள் சங்வொன் ச்சன் பிரசங்கங்கள் அடங்கிய புத்தக் கட்டை கொடுத்தாள்.

அவள் வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை வாசித்தபோது, அதில் பதிவுசெய்யப்பட்ட பன்னிரெண்டு அஸ்திபார கற்களை குறித்து ஆச்சரியமடைந்தாள். அதைப் பற்றி இணையதளத்தில் தேடிய போது, தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் வெளிப்படுத்தின விசேஷத்தை குறித்த செய்திகளை கண்டுபிடித்தாள். அவளுடைய கேள்விக்கான பதில்கள் அந்த செய்திகளில் கிடைத்தது. எனவே, அவருடைய மற்ற செய்திகளை கேட்க ஆரம்பித்தாள். அவள் பிரசங்கங்கள் அடங்கிய தாள்களை இணைத்து, தான் குறிப்பெடுத்ததை வைத்து தியானிக்க ஆரம்பித்தாள். அவள் அதைத்தான் என்னிடம் கொடுத்தாள்.

நான் ஆதியாகம விரிவுரைகள், வெளிப்படுத்தின விசேஷத்தின் விரிவுரைகள், யோவான் விரிவுரைகள் மற்றும் விசுவாசத்தின் அளவு போன்ற பிரசங்கங்களை வாசித்தேன். ஏதேன் தோட்டம் மற்றும் பறக்கும் தட்டு பற்றிய என் கேள்விகளுக்கும் பதில் கிடைத்தது. ரோமர் 12:3ம் வசனத்தின் அடிப்படையில் விசுவாசத்தில் அளவுகள் உண்டு, அது ஒவ்வொரு தனிநபருக்கும் வித்தியாசப்பட்டிருக்கும் என்ற விளக்கம் என்பதை அதிகம் ஈர்த்தது. விசுவாசத்தின் அளவின்படி பரலோகத்தில் வெவ்வேறான இடங்களுக்கு நாம் செல்வோம் என்ற உண்மையும், பரலோகம் நரகம் பற்றிய தெளிவான விளக்கங்களும் என்னை ஆச்சரியப்பட வைத்தது; என் இதயத்தின் ஆழத்தில் தொடப்பட்டேன்.

ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழ்வதைப் போல நான் காணப்பட்டேன், ஆனால் பாவ பிரச்சனையால் நான் இக்கட்டான சூழ்நிலையில் இருந்ததை உணர்ந்தேன். நான் தொடர்ச்சியாக மனந்திரும்பி கொண்டிருந்தேன்; வசனத்தின் அறிவு எனக்குள் அதிகம் இருந்தபோதிலும் என் இருதயம் விருத்தசேதனமடையாமல் இருந்தது. ஆனால் அறிவர். ஜேராக் லீ அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தில் அப்படிப்பட்ட இருதயத்திலுள்ள பாவ சுபாவங் களையும் அகற்ற முடியும் என்று பிரசங்கித்தார். அது என்னை அதிர்ச்சிகுள்ளாகினாலும், எனக்குள் நம்பிக்கையை கொடுத்தது. மக்கள் தங்கள் இருதயத்திலுள்ள தீமையையும் பாவத்தையும் மறைத்து வெளிப்புறத்தில் ஒரு பரிசுத்த வாழ்க்கையை வாழ்வதைப் போல காண்பித்து, வெளிப்புறத்தை மட்டுமே சுத்தமாய் வைத்திருப்பார்கள். ஆனால் தலைமை போதகர் அவர்களோ மிகவும் உண்மையும் நேர்மையுமானவராக இருந்தார், அவர் எதையும் மறைக்கிறவரும் இல்லை.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, என் மனைவி தன்னுடைய சொப்பனத்தில் அறிவர். லீ தோன்றி அவளுடைய பிரச்சனையை தீர்த்ததாகச் சொன்னாள். என் மனைவி, “பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை” என்கிற மத்தேயு 7:21ம் வசனத்தின் அர்த்தத்தை உணர்ந்து கொண்டதாகச் சொன்னாள். அவள் இனி நாம் மான்மின் தலைமை சபைக்குச் செல்வோம் என்று சொன்னாள்.

அந்த நேரத்தில் என் ஊழியம் சிறப்பாக சென்று கொண்டிருந்ததால், நான் சிறிது கவலைப்பட்டேன். அதைக் குறித்து ஜெபித்தபோது, எனக்குள் சமாதானத்தை உணர்ந்தேன்; எல்லாம் நன்றாய் இருக்கும், நீ போ என்று சொல்லும் பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தைக் கேட்டேன். எல்லாவற்றையும் விட்டுவிட்டு, ஒரு சாதாரண விசுவாசியாக என் மனைவியோடு ஜனவரி 2013ல் மான்மின் சபைக்குச் சென்று பதிவுசெய்தேன்.

நான் தனிப்பட்ட விதத்தில் மான்மின் சபை விசுவாசிகளைப் பார்த்தபொழுது, அவர்களின் விசுவாசம் பெரிதாய் காணப்பட்டது. அவர்கள் ஒவ்வொரு நாள் இரவும் கூடிவந்து ஒருமனப்பட்டு ஜெபிக்கிறார்கள், தேவனுடைய வார்த்தையினால் வாழ்வதற்கு தங்களது சிறந்த முயற்சிகளை ஏறெடுக்கிறார்கள். மற்ற சபைகளில் இருக்கும் போதகர்களைவிட அவர்களின் விசுவாசம் அதிக வாஞ்சை நிறைந்ததாய் காணப்பட்டது.

நான் இதற்கு முன்பு விசுவாசிகளுக்கு தேவனுடைய வார்த்தை போதிக்கிறவனாய் இருந்தபோதிலும், மான்மின் சபையிலுள்ள ஒரு சாதாரண விசுவாசியின் விசுவாச அளவிற்கு ஈடாக என் விசுவாசம் இல்லை என்பதை அறிந்து கொண்டேன். என் விசுவாச வாழ்க்கையை தற்போதுதான் துவக்கியிருக்கிறேன் என்று எண்ணி, தாழ்மையான இருதயத்தோடு இருக்க தீர்மானம் எடுத்தேன். 2014ல் நானும் என் மனைவியும் சாலோம் பாடகர் குழுவில் இணைந்தோம்.

நான் மான்மின் அங்கத்தினராய் மாறிய பிறகு, பரிசுத்த ஆவியானவரால் எனக்கு சமாதானம் நிறைந்த மகிழ்ச்சி கொடுக்கப்பட்டது, அது என்னுடைய இருதயத்தை நிறைத்தது. முன்பு என் சுயநீதி மற்றும் சுயநல எண்ணங்களால் அடிக்கடி கோபமடைந்தேன், ஆனால் தற்போது அவை அதிகமாய் குறைந்துவிட்டது. என் மனைவியும்கூட அருமை யானவளாக மாறினாள். “நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்” என்று 1 பேதுரு 1:16 தெளிவாய் சொன்னாலும்கூட, மான்மின் சபைக்கு வருவதற்கு முன்பு இருதயத்தில் உள்ள பாவசுபாவங்களை அகற்றுவது கூடாத ஒன்று என்று நினைத்து கொண்டிருந்தேன். ஆனால் ஜீவனுள்ள வார்த்தையை பற்றிக்கொண்டு பரிசுத்த ஆவியானவரை சார்ந்து, இடைவிடாமல் நான் ஜெபிக்க ஆரம்பித்த பிறகு, என் இருதயம் புதுப்பிக்கப்பட்டது.

2016ம் ஆண்டு நவம்பர் மாதத்திலும்கூட, நான் தேவனுடைய விசேஷித்த பாதுகாப்பை அனுபவித்தேன். நான் நெடுஞ்சா–லையில் வாகனம் ஓட்டியபோது, எனக்கு அருகில் வந்த கார் ஒரு எல் (டு) வடிவ இரும்பில் மோதி விபத்துக்குள்ளான–போது, அது தூக்கியெறிப்பட்டு என் காரின் மேல் மோதும்படி வந்தது. ஆனால் நான் பாதுகாக்கப் பட்டேன்.

தேவன் என்னை மான்மின் சபைக்கு வழிநடத்தினார். ஜீவனுள்ள வார்த்தையினால் கர்த்தருடைய இருதயத்தின் சாயலை என்னால் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை நான் விசுவாசிக்கிறேன். அவருக்கே சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

## சிங்கப்பூர், மலேசியா மற்றும் இந்தோனேசியாவிலிருந்து வந்த சாட்சிகள்

### “நான் ஊன்றுகோலின் உதவியின்றி நடக்க ஆரம்பித்தேன்!”

லின் மிய், வயது 50, சிங்கப்பூர்



ஜனவரி 2018ல், நான் ஒரு கார் விபத்தில் சிக்கியதால், என் கால்களும், மூட்டும் முறிந்துப்போனது. மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டும், ஊன்றுகோல் உதவியோடு மட்டுமே என்னால் சிறிதே நடக்க முடிந்தது. ஏப்ரல் 8 அன்று, நான் கைக்குட்டை ஜெபத்தைப் (அப்.19:11–12) பெற்றுக்கொண்ட பிறகு, என் கால்கள் பலங்கொண்டது, நான் உதவியின்றி நடக்க முடிகிறது! அல்லேலூயா!



### “என் வலது காதில் கேட்கும் திறனை பெற்றுக்கொண்டேன்!”

லிங் சூலன், வயது 27,
சிபு செவிடர்களுக்கான மான்மின் சபை, மலேசியா



நான் பிறவியிலிருந்தே செவிடாக பிறந்தேன். என் வலது காதில் காதுகேட்கும் கருவியின் மூலமாக மிக குறைவான சத்தத்தை மட்டுமே என்னால் கேட்க முடியும். ஏப்ரல் 11 அன்று, நான் கைக்குட்டை ஜெபத்தைப் பெற்றேன். அந்த நேரத்தில், பரிசுத்த ஆவியின் அக்கினி எனக்குள் இறங்கிய போது, என் சரீரம் முழுவதும் அனல் கொண்டது. என் வலது காதிலும் அனலை உணர்ந்தேன். அதன் பிற்பாடு, காதுகேட்கும் கருவியின் உதவியின்றி என்னால் சத்தத்தை தெளிவாக கேட்கமுடிகிறது! அல்லேலூயா!

### “மூட்டு வலியிலிருந்து நான் விடுதலையடைந்து, ஊன்றுகோல் உதவியின்றி நடக்கிறேன்!”

யன் சாய்மிமா, வயது 74,
மான்மின் சபை தாங்கெரங், இந்தோனேசியா

2017ம் ஆண்டின் பிற்பகுதியில் ஒரு விபத்தினால் என்னுடைய இடது கால் துண்டிக்கப்பட்டது. இதனால் நான் ஒரு செயற்கைக்காலை அணிந்து வந்தேன், இருந்தாலும் என் மூட்டின் உள்பகுதியில் ஏற்பட்ட வலியானது ஒவ்வொரு நாள் இரவும் பகலும் என்னை மிகவும் தொல்லைப்படுத்தியது. ஒரு உதவியின்றி என்னால் நடக்க முடியாது. ஏப்ரல் 16 அன்று, நான் கைக்குட்டை ஜெபத்தைப் பெற்ற போது, என் இடது காலில் ஒரு தொடுதலை உணர்ந்தேன். அதன்பிறகு, வலி மறைந்துப்போனது, ஊன்றுகோலின் உதவியின்றி நான் வலியின்றி இப்போது நடக்க முடிகிறது! அல்லேலூயா!



GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com